# உங்கள் மக்கள் பிரதிநிதியை சரியாக தெரிவு செய்வது எப்படி?

தொகுப்பு:
சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி
ரோஹன ஏட்டியாராச்சி
(நிறைவேற்றுப் பணிப்பாளர் - ப.்.வ்ரல்

2013 ஆகஸ்ட்

**ப.்.வ்ரல்**
சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு
12/3, றொபட் டெறஸ், றொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.
தொலைபேசி : 011 2514441/2
தொலைநகல் : 011 2514443
மின் அஞ்சல் : paffrel@sltnet.lk
இணையத்தளம் : www.paffrel.lk

# முன்னுரை

எமது அரசியலமைப்பின்படி இலங்கை ஒரு குடியரசாகும். அரசியலமைப்பின் 3வது உறுப்புரையில் இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதென கூறப்பட்டுள்ளது.

இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், (அதிகாரம்) அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகிய மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது. மக்கள் ஆட்சித் தத்துவங்களைக் கொண்டிருந்தாலும் அனைவருக்கும் அதில் பங்கு கொள்ள முடியாததால், அதனை மக்களின் விருப்பத்திற்கேற்ப அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிறது.

அரசாங்கம் மக்களின் ஆட்சித் தத்துவங்களை மூன்று துறைகள் ஊடாக நடைமுறைப்படுத்துகிறது. அதாவது,

1 சனாதிபதி, அமைச்சரவை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் மக்களின் நிறைவேற்று அதிகாரங்கள் நிறைவேற்றுத்துறை ஊடாகவும்,

2. மக்களின் சட்டவாக அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் ஊடாகவும்,

3. மக்களின் நீதி அதிகாரங்கள் சுயாதீனமான நீதித்துறை ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மக்கள் தீர்ப்பு (மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு) ஒன்றின்போது மக்கள் நேரடியாகவே தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றனர்.

தமது அடிப்படை உரிமையான வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கு சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றுக்காக நிபந்தனைகளின்றி அணிசேர வேண்டுமென்தே எமது நம்பிக்கை.

இந்த நூல், சிறந்த மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செயதுகொள்வதற்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. இதன் மூலம் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது வேட்பாளருக்கும் பாதிப்போ அல்லது விஷேட நன்மையோ ஏற்படமாட்டாது.

இந்த நூல் மக்களின் இறைமையைப் பாதுகாப்பதிலும், பொருத்தமான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வதிலும் ஆர்வம் கொண்டுள்ள அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்குமென நம்புகிறோம்.

**றோஹண ஹெட்டியாராச்சி**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.**

# மக்கள் பிரதிநிதியை சரியான முறையில் தெரிவு செய்வது எப்படி?

## எங்கள் முயற்சி

1931 இலிருந்து சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்திவரும் ஒரு நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் நாம் பெருமையடைகிறோம். காரணம் உலகத்தில் பழைமையான சர்வஜன வாக்குரிமை கொண்ட நாடுகளின் பட்டியலில் நாமும் அடங்குகிறோம். உலகத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இராணுவ சதி அல்லது வேறு வகையான கிளர்ச்சிகள் இன்றி வாக்குரிமையை பயன்படுத்தி அரசாங்கங்களை அமைக்கும், கழிவிக்கும் ஒரு முறைமை எமது நாட்டில் தொடர்ச்சியாக நிலவி வருகிறது. அதாவது தேர்தல் முறைமையில் குறைபாடுகள் இருப்பினும் உரிய காலத்தில் தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன.

எமது சமூகத்தில் அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியல் வரவேற்பு இல்லை. அவர்கள்தம் வகிபங்கை மறந்து அரசியலை இலாபம் சம்பாதிக்கும் தொழிலாக நடாத்திச் செல்வது பற்றி பலரும் குற்றம்சாட்டி வருகின்றனர். சற்று சிந்திப்போமானால், நாங்கள் கூடி தெரிவு செய்யும் அரசியல்வாதிகளை பின்னர் நாங்களே சாடுகிறோம் என்ற உண்மை எங்களுக்கு புரியும்.

இந்நிலைமை பிரதிநிதித்துவ சனநாயகத்தின் ஆரோக்கியமான இருப்புக்கு தடையாக அமைவதோடு, வாக்காளர்களாகிய எங்களின் பொறுப்புணர்வின்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

தகுதியற்றவர்களும், ஊழல் புரிபவர்களும் அரசியலில் பிரவேசிக்காதிருப்பதற்கான முக்கிய பொறுப்பை அரசியல் கட்சிகள் கொண்டுள்ளபோதும், அக்கட்சிகள் அறிமுகம் செய்யும் நபர்களிடையே இருக்கும் இவ்வாறானவர்களை மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யாதிருப்பதற்கான பொறுப்பு வாக்காளர்களாகிய எமக்கு உண்டு.
இச்சிறிய வெளியீடு, சாதகமான அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் வாக்காளர்களை ஓரளவுக்கு வழிகாட்டுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

# மக்கள் பிரதிநிதியை சரியான முறையில் தெரிவுசெய்வது எப்படி?

## உள்ளடக்கம்


1 பிரதிநிதித்துவ சனநாயகமும் மக்களின் இறைமையும் 1

2 இலங்கையில் ஆட்சிமுறையும் மக்கள் பிரதிநிதிகளின் வகிபங்கும் 3

3 மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும்போது பலரின் கவனத்திற்குரிய விடயங்கள் 5

4 தேர்தலொன்றில் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட முடியாமற்செய்யும் தகுதியீனங்கள் 6

5 மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் அடிக்கடி எழும் குற்றச்சாட்டு 8

6 மக்கள் பிரதிநிதிகள் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள் 9

7 சரியான நபரை வேட்பாளராக தெரிவுசெய்வதில் காணப்படும் தடைகள் 13

8 வாக்குரிமை 14

9 வாக்கெடுப்பு நிலையங்கள் 14

10 தபால்மூலம் வாக்களிப்பிற்கு விண்ணப்பித்தல் 15

11 வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியவை 16

12 வாக்களிக்கும் முறை 17

13 வாக்குச்சீட்டில் குறியீடு இடுதல் 18

14 மாதிரி வாக்குச்சீட்டு 19

# 1. பிரதிநிதித்துவ சனநாயகமும் மக்களின் இறைமையும்


எமது அரசியலமைப்பின்படி இலங்கை ஒரு குடியரசாகும். அரசியலமைப்பின் 3வது உறுப்புரையில் இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதென சொல்லப்பட்டுள்ளது.

இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், (அதிகாரம்) அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகிய மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது. மக்கள் ஆட்சித் தத்துவங்களைக் கொண்டிருந்தாலும் அனைவருக்கும் அதில் பங்கு கொள்ள முடியாததால், அதனை மக்களின் விருப்பத்திற்கேற்ப அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்றது.


அரசாங்கம் மக்களின் ஆட்சித் தத்துவங்களை மூன்று துறைகள் ஊடாக நடைமுறைப்படுத்துகிறது. அதாவது,

1 சனாதிபதி, அமைச்சரவை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் மக்களின் நிறைவேற்று அதிகாரங்கள் நிறைவேற்றுத்துறை ஊடாகவும்,
2. மக்களின் சட்டவாக அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் ஊடாகவும்
3. மக்களின் நீதி அதிகாரங்கள் சுயாதீனமான நீதித்துறை ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மக்கள் தீர்ப்பு (மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு) ஒன்றின்போது மக்கள் நேரடியாகவே தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றனர்.

இறைமையில் வாக்குரிமையும், மனித உரிமைகளும் மக்களுக்கு உரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் காணப்படும். எனவே குடியரசில் ஆட்சித்துறையை விடவும் மக்களே மேலாண்மை கொண்டிருப்பர். **கீழ்வரும் வரைபடம் மூலம் அதனை விளக்கலாம்.**




மக்களின் இறைமை ஆரோக்கியமான முறையில் செயல்பட வேண்டுமாயின் மக்கள் தம் பிரதிநிதிகளாக பொருத்தமான நபர்களை தெரிவு செய்தல் இன்றியமையாதது. தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி ஆட்சித்துறைக்கு பொருத்தமற்ற நபர்களை தெரிவுசெய்யும்போது இந்த நிலைமை தலைகீழாக மாறிவிடுகிறது.



## 2. இலங்கையில் ஆட்சிமுறையும் மக்கள் பிரதிநிதிகளின் வகிபங்கும்

நாம் ஏற்கனவே கூறியுள்ளதன்படி, மக்கள் இறைமையின் கீழ் ஆட்சி புரிவதற்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்போது இலங்கையில் காணப்படும் ஆட்சிக்கட்டமைப்பில் 03 நிறுவனங்களுக்கான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்.
அதாவது,

1 பாராளுமன்றம்
2 மாகாணசபைகள்
3 உள்ளூராட்சி மன்றங்கள் (மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள்)

இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் பாரியளவில் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகும். எனவே, இவற்றுக்குத் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளின் தகைமைகளும். திறமைகளும் மாறுபடுகிறது.

பாராளுமன்றம் அனைத்து விடயங்கள் தொடர்பான கொள்கைகளை அங்கீகரித்தல், நாட்டிற்குத் தேவையான சட்டங்களை ஆக்குதல் மன்றும் அரசாங்க நிதி தொடர்பான பூரண கட்டுப்பாட்டினையும் கொண்டுள்ளது. மேலும், ஒவ்வோர் அரசாங்க நிறுவனமும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சரவை பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். ஆகவே, நாம் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்து அனுப்பும் நபர், நாட்டின் எதிர்காலம் பற்றிய பரந்த சிந்தனையுடைய ஒருவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பிரதேச அல்லது இனரீதியாக அன்றி ஒட்டுமொத்த நாட்டின் நலன்கருதி தீர்மானங்களை எடுக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மாகாண சபைகள் அரசியலமைப்பினால் ஒப்படைக்கக்பட்டிருக்கும் பணிகளை மட்டுமே நிறைவேற்றுகின்றன. இருப்பினும், இன்றளவில்

இயங்கிவரும் மாகாண சபைகள் தமது விடயப்பரப்பினுள் அடங்கும் விடயங்களைக்கூட முழுமையாக பூர்த்தி செய்வதில்லை. இந்நிலையில் மாகாண சபைகளுக்கத் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள், மாகாணசபை முறை மற்றும் நியதிச்சட்ட அதிகாரங்கள் தொடர்பில் சரியான விளக்கத்தையும், தொலை நோக்கையும், நம்பிக்கையையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாறான நபர்களாலேயே தமது வகிபங்கை நிறைவேற்ற முடியும்.

பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் என அறியப்படும் உள்ளூராட்சி நிறவனங்கள் மேற்கூறிய இரண்டு நிறுவனங்களை விடவும் தனித்துவமானவை.

பிரதேசத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்தல் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நோக்கமாகும். அதாவது அரசாங்கத்தின் ஒரு சில நிறுவனங்களுடைய உப நிறுவனங்களாக செயற்பட்டு பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல். இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு பிரதேச சபைகளுக்கு கீழுள்ளவாறு பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைக்குரிய அபிவிருத்தி மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்கு பொதுமக்கமளின் பங்கேற்பினை பெற்றுக்கொள்ளுதல் பொதுச்சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், அறக்கொடை, உரிமக்கட்டண அறவீடு, வரி அறவீடு, இறங்குதுறைகளை அமைத்தல், சமய விழாக்களை ஏற்பாடு செய்தல், குடிநீர் விநியோகம் மற்றும் பிரதேசத்தில் குடியிருப்போருக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

எனவே, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்போது மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் புரிந்துணர்வும், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசத்தின் தேவைகளை நன்கு அறிந்துள்ளவர்களையும் தெரிவுசெய்தல் வாக்காளர்களின் பொறுப்பாகும்.

## 3. மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும்போது பலரின் கவனத்திற்குரிய விடயங்கள்

- ✓ எமது கட்சியைச் சேர்ந்தவரா?
- ✓ எமது இனத்தைச் சேர்ந்தவரா?
- ✓ எமது சாதியைச் சேர்ந்தவரா?
- ✓ தனக்கு, தன் பிள்ளைக்கு, உறவினருக்கு தொழிலொன்றைப் பெற முடியுமா?
- ✓ பிள்ளையை பிரபல பாடசாலையொன்றில் சேர்த்துவிட முடியுமா?
- ✓ அறிமுகம் உள்ளவரா?
- ✓ பிரபலம் மிக்கவரா?
- ✓ அச்சமின்றி பேச துணிந்தவரா?
- ✓ கட்சித்தலைவரோடு நெருக்கமாக உள்ளவரா?
- ✓ இச்சந்தர்ப்பத்தில் இவரை அணுகுவதால் நலன் பெற முடியுமா?

இதுபோன்ற விடயங்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு தமது பிரதிநிதியை தெரிவுசெய்வதால் பொருத்தமற்றவர்கள் அரசியலில் பிரவேசிக்கும் அபாயம் எற்படும். இதனால், குறுகிய கால மற்றும் தன்னல அரசியல் கலாசாரம் உருவாக்கப்படுகிறது. ஆகவே, சிறந்த அரசியல் வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவது கடினமானதும், இயலாததுமான காரியமாகிவிடுகிறது. அரசியலில் ஊழல் ஊடுருவுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

**“உங்கள் கருத்துடன் நான் உடன்படமாட்டேன்.
ஆனால், உங்கள் கருத்துச் சுதந்திரத்தை
உயிரிலும் மேலாக பாதுகாப்பேன்”.**

**- வோல்ரெயார் -**

## 4. தேர்தலொன்றில் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட முடியாமற்செய்யும் தகுதியீனங்கள்

இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர். சனாதிபதித் தேர்தலின்போது ஒருவர் மட்டுமே தெரிவுசெய்யப்படுகிறார். ஏனைய தேர்தல்களில் வேட்பாளர்களாக தெரிவுசெய்யப்பட முடியாமை தொடர்பான தகுதியீனங்கள் அரசியலமைப்பிலும், அந்தந்த தேர்தல் சட்டங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### I பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்ய முடியாமைக்கான தகுதியீனங்கள் (அரசியலமைப்பின் 91வது உறுப்புரையில் தரப்பட்டுள்ளது).

1. ஒன்றுக்கும் மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களில் வேட்புமனுத் தாக்கல் செய்தவராக இருந்தால்
2. ஒன்றக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்களில் வேட்புமனுத் தாக்கல் செய்தவராக இருந்தால்
3. அரசாங்க ஊழியராக இருந்தால்
4. குடியரசின் சனாதிபதியாக இருந்தால்
5. அரச கூட்டுத்தாபன ஊழியராக இருந்தால்
6. முப்படையில் நிலையான படை உறுப்பினராக இருந்தால்
7. பொலிசு உத்தியோகத்தராக இருந்தால்
8. அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்தவராக இருந்தால்
9. வங்குரோத்தானவராக இருந்தால்
10. பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது இலஞ்சம் பெற்றுள்ளது உறுதிசெய்யப்பட்ட ஒருவராக இருந்தால்
11. இலங்கைப் பிரஜை அல்லாதவராக இருந்தால்
12. 18 வயது பூர்த்தியாகாத ஒருவராக இருந்தால்
13. இரண்டு ஆண்டுகளுக்க மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு உட்பட்டவராக இருத்தல் (7ஆண்டுகளினுள்)

## II மாகாண சபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட முடியாமைக்கான தகுதியீனங்கள்
## (1987ஆண்டின் 42 இலக்க மாகாண சபைகள் சட்டம் பிரிவு 3)

1 மேலே கூறப்பட்டுள்ள, பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட முடியாமைக்கான அனைத்து தகைமையீனங்களும் (1 மற்றும் 2 தவிர்ந்த)
2 உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக தெரிவுசெய்ய முடியாமைக்கான தகுதியீனம்
3 பாராளுமன்ற உறுப்பினராக இருப்பின்
4 வேறேதும் மாகாண சபையின் உறுப்பினராக இருப்பின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாகாண சபைகளுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்திருந்தால்
5 ஒன்றுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களில் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தால்

## III உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு மக்கள் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட முடியாமைக்கான தகுதியீனங்கள் (உள்ளூராட்சி தேர்தல் சட்டம் 9 பிரிவு)

1 இலங்கைப் பிரசையாக இல்லாதிருந்தால்
2 18 வயது பூர்த்தியாகாத ஒருவராக இருந்தால்
3 அரசாங்க ஊழியராக இருந்தால்
4 கூட்டுத்தாபன ஊழியராக இருந்தால்
5 ஆயுதப்படை உறுப்பினராக இருந்தால்
6 பொலிசு உத்தியோகத்தராக இருந்தால்
7 நீதிமன்ற அலுவலராக இருந்தால்
8 வேறொரு உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினராக இருந்தால்
9 தேர்தல் திகதிக்கு உடன்முந்திய ஓராண்டு காலத்தினுள் உள்ளூராட்சி மன்றத்தில் பணியாற்றி இருந்தால்
10 அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திருந்தால்

11 சித்தசுவாதீனம் அற்றவராக இருந்தால்
12 வங்குரோத்தானவராக இருந்தால்
13 ஓராண்டுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவிப்பவராக இருந்தால் அல்லது மரண தண்டனை பெற்று சிறைத்தண்டனை அனுபவிப்பவராக இருந்தால்

## 5. மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் அடிக்கடி எழும் குற்றச்சாட்டு

- இலஞ்சம் பெறல்
- ஒப்பந்தங்களால் பணத்தைக் கையாடல்
- பணத்திற்காக கட்சித்தாவல்
- பொலிஸாருக்கு இடையூறு செய்தல்
- அரசாங்கத்தின் வளங்களை தனது அரசியல் மற்றும் தனிப்பட்ட நலன்களுக்காக பயன்படுத்துதல்
- தமது குடும்பத்தவர்களுக்கு தவறான வழியில் சலுகையளித்தல்
- தேர்தலின் பின் வாக்குறுதி மீறல்
- அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுதல்

உங்கள் பெறுமதியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டோருக்கு இதுபோன்ற குற்றச்சாட்டுகள் உண்டா என்பது பற்றி விழிப்புடன் இருங்கள். அது உண்மையெனில், அடுத்துவரும் தேர்தல்களில் அதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாதவர்களைத் தெரிவுசெய்யுங்கள்

## 6. மக்கள் பிரதிநிதிகள் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள்

### 1. நேர்மை

எமது மக்கள் பிரதிநிதி உண்மையாகவே நேர்மை கொண்டவராகவும், அரசியல் புரிவதன்மூலம் நாட்டின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் பற்றுடையவராகவும் இருத்தல் வேண்டும். தனது தனிப்பட்ட பொருளாதார நலன்கள் கருதி அரசியல் புரியும் ஒருவராக இருத்தல் கூடாது. நேர்மை மிக்க ஒருவர் அனைத்து சந்தர்ப்பங்களிலும், தேர்தல் சட்டத்திற்கு கட்டுப்பட்டு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும்போது தன்னுடைய மற்றும் தனது குடும்பதிலுள்ளோரின் சொத்து விபரத்தை வெளியிடுவார். வேட்பாளரின் அரசியல் நேர்மையானதா, நேர்மையற்றதா என்பதை கண்டறிதல் வாக்காளர்களுக்கு சிரமமான ஒன்றல்ல. அரசியலுக்கு வந்த பின்னர் விபரிக்க முடியாத அளவுக்கு சொத்துக்களை குவித்திருப்பாராயின் அவரது அரசியல் நேர்மையற்றது. இதுபோன்ற நபர்களை நாம் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யக்கூடாது.

### 2 சட்ட விரோதமாக அல்லது சமூக விரோதமாக பணம் சம்பாதிக்காத ஒருவராக இருத்தல் வேண்டும்.

தொன்மையான கலாசார பாரம்பரியம் கொண்ட இலங்கைச் சமூகத்தில் எற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழில் மற்றும் சட்டவிரோத தொழில்களை இலகுவில் கண்டறிய முடியும். சமூக விரோத தொழில்களில் ஈடுபடுவோர் துரோகிகள். எனவே துரோகிகளை மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்தல் கூடாது. தெரிவுசெய்வோமானால் அவர் தனது அரசியல் பலத்தை பயன்படுத்தி சமூக விரோதச் செயல்களில் தீவிரமாக ஈடுபடுவார். அதன் விளைவாக சமூகம் மேலும் சீரழிந்துவிடும்.

3. **உங்களுக்கு நெருக்கமான ஒருவராகவும் பிரதேசத்தில் காணப்படும் வளங்கள் பற்றி நன்கு அறிந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.**

மக்கள் பிரதிநிதி உண்மையாகவே எமது அபிலாசைகளை நிறைவேற்றும் ஒருவராக இருத்தல் வேண்டும். எமது பிரதேசத்தில் காணப்படும் வளங்கள் பற்றி நன்கு அறிந்தவராகவும், எமது குரலுக்கு செவிசாய்ப்பவராகவும், பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்பவராகவும் இருத்தல் வேண்டும். பிரச்சனைகளுக்கு விளக்கம் தருபவராக அன்றி தீர்வுகளையும் மாற்றீடுகளையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4. **நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும்.**

அநேகமான அரசியல்வாதிகள் சட்டத்தை தம் கையில் எடுப்பதையும், சட்டத்தை மதிக்காது செயற்படும் சந்தர்ப்பங்களையும் காண முடியும். இந்நிலைமை நாட்டுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே, எமது தெரிவு சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும். சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தடைக்கல்லாக அமையாதவராகவும், தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் திட்டமிடலின்போது நல்லாட்சித் தத்துவங்களை மதித்து கூட்டுறவு மற்றும் பங்கேற்பு வழிமுறையை கையாளும் ஒருவராகவும், மனித மாண்பினை மதிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **அரசியல் புரிந்துணர்வு, தொலைநோக்கு உள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்.**

எமது மக்கள் பிரதிநிதி அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் புரிந்துணர்வு உள்ளவராகவும், குடும்பவழி அரசியலை முன்னெடுத்துச் செல்லாது தன்னுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பவராகவும் இருத்தல் வேண்டும். இவர்கள் தமது

வெற்றிக்குப் பின் கட்சி ஆதரவாளர்களை நட்டாற்றில் கைவிட்டு கட்சி மாறுவதில்லை. கொள்கை வகுப்பாளர் ஒருவரின் நீண்ட பயணத்திற்கு போதிய கல்வியறிவு இன்றியமையாதது. எனவே, எமது மக்கள் பிரதிநிதிகளின் கல்விப் பின்புலம் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 6. இலஞ்சம், ஊழல் தொடர்பில் குற்றஞ் சாட்டப்படாதவராக இருத்தல் வேண்டும்

அதிகாரத்திலுள்ள ஒரு சில அரசியல்வாதிகள் தொழில் வழங்குதல், ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளின்போது பணத்தை கையாடுவது அனைவரும் அறிந்ததே. இதனால் பொதுமக்களின் பணம் பாரியளவில் கபளீகரம் செய்யப்படுவதோடு, இந்நிலைமை எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் முட்டுக்கட்டையாகவும் அமைந்துவிடுகிறது. இதுபோன்ற அரசியல்வாதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பு வாக்காளர்களிடையே உள்ளது.

## 7. இன, மத மற்றும் பன்மொழி தொடர்பான புரிந்துணர்வு இருத்தல் வேண்டும்.

இலங்கையானது பல் இன, மத சமூக அமைப்பை கொண்ட நாடாகும். மக்கள் பிரதிநிதி இதுபற்றிய புரிந்துணர்வையும், இதை ஏற்றுக்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும். எனவே, சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அவை நடைமுறைக்குச் சாத்தியமானதாக அமைவதற்கும் இந்த புரிந்துணர்வு இன்றியமையாதது.

## 8. சவால்களைக் கண்டு பின்வாங்காத ஒருவராக இருத்தல் வேண்டும்.

எமது மக்கள் பிரதிநிதி உயர் இலட்சியக்கொள்கை உடையவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், சரியானதைச் செய்யத் துணிபவராகவும் சவால்களைக் கண்டு துவண்டுபோகாத ஒருவராகவும் இருத்தல் வேண்டும். தனது கொள்கைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றக் கூடியவராகவும், தனிப்பட்ட நோக்கங்களுக்கு மாறாக சமூகத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஆக்கபூர்வமான சிந்தனை, பிறரின் கருத்துக்கு மதிப்பளித்தல் பொறுமை என்பன மக்கள் பிரதிநிதியிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகளாகும்.

## 9. இளைஞர்களினதும், பெண்களினதும் பிரதிநிதித்துவம்

அரசியலில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவது கவலைக்குரியது. எனவே, நாம் எமது மக்கள் பிரதிநிதியை தெரிவுசெய்யும்போது அதில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய வேண்டும்.

**“ஓர் அரசாங்கத்தின் நிலையான இருப்பினை நீதித்தூண்கள் தாங்கிப்பிடிக்கின்றன”**

**- ஜோர்ஜ் வொஷிங்ரன் -**

## 7. சரியான நபரை வேட்பாளராக தெரிவுசெய்வதில் காணப்படும் தடைகள்

I. மிகச்சிறந்த வேட்பாளரை எம்மால் தெரிவுசெய்ய முடியாது. மாறாக அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்படும் பட்டியலில் இடம்பெறும் ஒருவரையே நாம் வேட்பாளராக தெரிவுசெய்தல் வேண்டும்.
II. தற்போதைய தேர்தல் முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டும். பணவசதி இன்றி சிறந்த வேட்பாளர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வது கடினம்.
III. தேர்தல் முறை மற்றும் பொதுவாக அரசியலில் மீது பற்றின்மை காரணமாக சிறந்த மற்றும் திறமையானவர்களின் அரசியலில் நாட்டம் கொள்வில்லை.
IV. வெகுஜன ஊடகங்கள் கொள்கை மற்றும் வேலைத்திட்டங்களை பிரசாரம் செய்வதைவிடவும் தரமற்ற பேச்சுக்களையே நாடிச்செல்கின்றன.

எனவே, நாம் எமது மக்கள் பிரதிநிதியை தெரிவுசெய்வதில் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும். குறிப்பாக, அரசியல் கட்சிகள் தேர்தலில் நிறுத்தும் பொருத்தமற்றவர்களுக்கு வாக்களிக்காததன் மூலம் அவ்வாறானவர்கள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதை நலிவடையச் செய்வதற்கு வாக்காளர்களான எமக்குள்ள பொறுப்பையும் பலத்தையும் சரியாக இனம்காண வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ள மக்களின் இறைமையை சரியான பாதையில் இட்டுச் செல்லும் அதிகமான பொறுப்பினை வாக்காளர்கள் கொண்டிருப்பது இதன் மூலம் தெளிவாகிறது. ஒரு நாட்டின் நல்லாட்சியும் சட்டத்தின் ஆட்சியம் பாதுகாக்கப்படுவதற்கு மக்கள் இறைமையின் ஆரோக்கியமான செயற்பாடுகள் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன்.

எனவே, அரசியல்வாதிகளை குற்றஞ்சாட்டுவதை தவிர்த்து வாக்களிக்கும்போது வாக்கையும், விருப்பு வாக்கையும் சாதுரியமான முறையில் பயன்படுத்தி சிறந்த அரசியல்வாதிகளை தெரிவுசெய்வீர்களாயின் எமது நாடு எழில் நிறைந்ததாக மாறுவது உறுதி

**நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நீங்களே ஆரம்பிக்க வேண்டும்.**

## 8. வாக்களிக்கும் உரிமை

அரசியலமைப்பின்படி வாக்களிப்பதற்கு கீழே கூறப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
2 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
3 தேர்தல் ஆண்டில் சம்பந்தப்பட்ட தேர்தல் தொகுதியின் வாக்காளர் இடாப்பில் பதிவுபெற்றிருத்தல் வேண்டும்.

அரசியலமைப்பின் 89வது உறுப்புரையில் அறிவிக்கப்பட்டுள்ள தகுதியீனங்களுக்கு உட்படுவோர் வாக்களிக்க தகைமைபெற மாட்டார்கள்.

## 9. வாக்கெடுப்பு நிலையங்கள்

வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் மட்டுமே ஒருவருக்கு வாக்களிக்க முடியும். அமுலிலுள்ள சட்டத்தின்படி 02 விதமான வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன.

1 தபால் மூலம் வாக்களிக்கும் நிலையங்கள்
2 தேர்தல் தினத்தன்று அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்கள்

தபால் மூலம் வாக்களிக்கும் நிலையங்கள் தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் அமைக்கப்படும். தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளவர்கள் மட்டுமே அந்த நிலைங்களில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

## 10. தபால்மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தல்

தபால் மூலம் வாக்களிக்க பின்வருவோர் தகைமை பெறுவர்.

- பொலிசுத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.
- ஆயுதப் படையில் சேவையாற்றும் உறுப்பினாகள்.
- புகையரதத் திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றும் தேர்தல் திகதியில் நேரடியாக வாக்களிக்க முடியாதோர்.
- தேர்தல் தினத்திற்கு தேர்தலுடன் தொடர்புடைய நோக்கமொன்றுக்காக தான் ஈடுபடுத்தப்படலாம் எனக் கருதும் அரசாங்க, இலங்கை மத்திய வங்கி அல்லது மாகாண அரச சேவையிலுள்ள அல்லது பிற உத்தியோகத்தர்கள்.
- தாம் வேறொரு நிருவாக மாவட்டத்தில் வேட்பாளராக நிற்கும் காரணத்தினால் வாக்களிக்க முடியாத வேட்பாளர்.

ஏனைய அனைத்து வாக்காளர்களும் தேர்தல் தினத்தன்று முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரையான காலத்தினுள் தமக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்கினை அளிக்கவேண்டும்

**“அடுத்தவனுக்க கிடைக்காத நீதி**
**எமக்கும் கிடைக்காது”**

**- வுட்றோ வில்சன் -**

## 11. வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியவை

1. அடையாளத்தை உறுதி செய்ய வேண்டியது கட்டாயமென்பதால், பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை எதுத்துச் செல்ல வேண்டும்.

    1. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை
    2. செல்லுப்படியாகும் கடவுச் சீட்டு
    3. செல்லுப்படியாகும் வாகன உரிமப் பத்திரம்.
    4. அரசாங்க சேவையில் ஓய்வுபெற்றதற்கான அடையாள அட்டை
    5. முதியோர் அடையாள அட்டை
    6. ஆட்பதிவுத் திணைக்களத்தால் மதகுருமார்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை
    7. 2001 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டு கிராம உத்தியோகத்தர் ஊடாக இற்றைப்படுத்தப்பட்ட அடையாள அட்டை (2013 பின்னர் இது மாறலாம்)

    8. தேர்தல் திணைக்களத்தின் தற்காலிக அடையாள அட்டை

2. தமக்கு தபால் கிடைத்துள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை (இது இல்லாவிட்டாலும்கூட) வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் இருக்குமாயின் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். வாக்காளர் அட்டை இருப்பின் வாக்குச்சாவடியில் எற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

## 12. வாக்களிக்கும் முறை

- ✓ தலைதாங்கும் அலுவலரினால் அமைக்கப்பட்டிருக்கும் மறைவான இடத்திற்குச் சென்று தனது வாக்கினைப் பதிவு செய்தல் வேண்டும்.
- ✓ வாக்காளர் குறியீடு செய்த வாக்குச் சீட்டை தாமாகவே பெட்டிக்குள் இட வேண்டும்.
- ✓ தலைமைதாங்கும் அலுவலர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற முகவரினால், வாக்கெடுப்பு நிலைய முகவருக்குத் தெரியும்படியாக வாக்காளர் ஒருவருக்கு வாக்களிக்கும் முறை பற்றி தெளிவுபடுத்த முடியும். இச்சந்தர்ப்பத்தில் கடசியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்கும்படி ஆலோசனை வழங்கலாகாது.
- ✓ குருட்டுத் தன்மை அல்லது வேறு உடற்குறை காரணமாக வாக்களிக்க இயலாத ஒருவருக்கு அவரின் விண்ணபத்தின் பேரில் தலைமைதாங்கும் அலுவலர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஒருவரினால் வாக்குச்சீட்டில் குறியீடு செய்து பெட்டிக்குள் இட வேண்டும். இல்லாவிடின், தலைமை தாங்கும் அலுவலரின் அனுமதியுடன் குறித்த வாக்காளரை அழைத்துவரும் நபர் வாக்காளரின் பணிப்புக்கு அமைய குறியீடு செய்து பெட்டிக்குள் இடவேண்டும்.
- ✓ தற்செயலாக வாக்குச்சீட்டு பழுதுபட்டால் அதை தலைமைதாங்கும் அலுவலரிடம் ஒப்படைத்து தலைமைதாங்கும் அலுவலர் அது தற்செயலான நிகழ்வென திருப்தியடைந்தால் இன்னுமொரு வாக்குச்சீட்டினை வழங்க முடியும்.
- ✓ தமது வாக்கினை வேறொருவர் அளித்துள்ள சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட வாக்காளருக்கு ‘‘கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டு’’ வழங்கப்படும் இது வேறுபட்ட நிறத்தினையுடையதாய் காணப்படுவதோடு, அதனைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வெளிப்படுத்தல்

ஒன்றைச் செய்ய வேண்டும். இதனை கேட்டுப்பெறும் வாக்குகள் நிரலில் சேர்த்தல் வேண்டும்.

## 13. வாக்குச்சீட்டில் குறியீடு இடுதல்

1. தான் விரும்பும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு முன்னாலுள்ள பெட்டியில் தமது குறியீட்டினை இட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்திருந்தால் அது நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டாக கருதப்படும்

2. பாராளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தலின்போது, தான் விரும்பும் ஒருவர் இருவர் அல்லது மூவருக்கு விருப்பு வாக்கினை அளிக்க முடியும் அவரவருக்குரிய இலக்கத்தின் மீது குறியீடு செய்தல் வேண்டும்.
3. திருத்தப்பட்ட புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தின்படி வாக்களிக்கும்போது தமக்குரிய வாக்கினை மட்டுமே அளித்தல் வேண்டும். விருப்பு வாக்குகளை குறியீடு செய்யும் அவசியம் எழமாட்டாது.

வாக்கெடுப்பு நிலையத்தால் தரப்படும் வாக்குச்சீட்டினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**“எமக்குள்ள ஆழந்த கவலை எமது தலைமுறையில் தீய செயல்களைச் செய்யும் கொடூரமானவர்களைப் பற்றியதல்ல. நல்லவர்களின் தீவிரமான மௌனம் பற்றியே”**

**- மார்டின் லூதர் கிங் -**

## 14. மாதிரி வாக்குச்சீட்டு

**1. பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டின் மாதிரி**

**தேர்தல் / வாக்கெடுப்பு**

**அடியிதழ்த்தாள் இலக்கம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்சி "அ" | | | | | | | | | |
| கட்சி "பி" | | | | | | | | | |
| கட்சி "சீ" | | | | | | | | | |
| சுயேச்சைக் குழு 1 | | | | | | | | | |
| சுயேச்சைக் குழு 2 | | | | | | | | | |
| சுயேச்சைக் குழு 3 | | | | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |

**2. எதிர் காலத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களின்போது பயன்படுத்தப்படவுள்ள வாக்குச் சீட்டின் மாதிரி**

(உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டம் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் இதுவரையும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடாத்தப்படவில்லை. மேற்படி சட்டத்தின் 03வது அட்டவணைக்கு அமைய இது தயாரிக்கப்பட்டுள்ளது.)

**வாக்கெடுப்பு**

**அடியிதழ்த்தாள் இலக்கம் :**

| | | |
|---|---|---|
| கட்சி "அ" | சின்னம் | |
| கட்சி "பி" | சின்னம் | |
| கட்சி "சீ" | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 1 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 3 | சின்னம் | |